உ

திருவருள் துணை.

ம
நந்தி பதி
கோல்

# திருவாசக உண்மை.

இது,

கொழும்பு அரசினர் ஆசிரிய கல்லூரியிலும், வித்தியா நிலயத்திலும்,
தமிழ்ப்பண்டிதராயிருந்தவரும்
சுன்னாகம் வித்துவசிரோமணி

**அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள்**

மாணவருள் ஒருவருமாகிய
யாழ்ப்பாணம் தென்கோவை

**ச. கந்தைய பிள்ளையவர்கள்**

எழுதியது.

புதுவை
நந்தி வெளியீட்டு மன்றத்தவரால்
அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

கலியுகம் 5030. விபவ ௵ மார்கழி ௴

All Rights Reserved] 1928 [Price Two Annas.

# உண்மை முத்தி நிலை ஆராய்ச்சி

# மறுப்பு.

---

திருவாவடுதுறை ஆதீன சைவப் பிரசாரகரும், தேவகோட்டைச் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்துச் சித்தாந்த சாத்திர போதகருமாகிய தூத்துக்குடி ஸ்ரீமாந் பொ. முத்தைய பிள்ளையவர்கள் எழுதிய "உண்மை முத்தி நிலை ஆராய்ச்சி" யிலுள்ள குறைகளை நிறைவாக்கி யாழ்ப்பாணம் தென்கோவை ச. கந்தைய பிள்ளை யவர்களால் பல பிரமாணங்களோடு விரிவாக எழுதப்பட்ட இந்நூல் ஒருவாறு சுருக்கி எம்மால் அச்சிடப்பட்டுள்ளது. இம்மறுப்புரை அனைவராலும் அவசியம் படிக்கப்பட வேண்டியதாதலால், வேண்டுவோர் இரண்டணாத்தபால் முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்வாராக.

நந்தி வெளியீட்டு மன்றம்

நே. 4 அம்பலத்தாடையார் வீதி

புதுவை.

உ

சிவமயம்.

# திருவாசக உண்மை.

" நன் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தேன் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே. "

வேதாந்த வீடு எனப்படும் திருக்கயிலை முதற்குரவனும் சைவபரிபாலகனுமாகிய எம்பெருமான், உண்மைச் சைவமுத்தியின் இலக்கணத்தையும் அதன் அருமை பெருமையையும் அகில சீவர்களும் அறிந்து உய்தியடையுமாறு தனது அருமைத் திருக்கரத்தால் எழுதி உதவி அருளிய தெய்வத்தமிழ் மறையும், பல்லோருங் கண்டு பணிந்து போற்றும்படி உடையான் அடிக்கீழ் பெருஞ்சாத்தோடு மறைந்து அவ் உண்மைச் சைவமுத்தியை அடைந்த மணிவாசக சிவம் மணிவாய் மலர்ந்து அருளியதும், " அந்தமுமாதியு நான்முகனுமரவணையானுமறிவரிய மந்திரவேதங்கள் " எனப்படும் எம்பெருமான் வடிவமாகிய நித்திய வேதசாரமாக விளங்குவதுமாகிய திருவாசகநுதலிய பொருள் என்னும் திருவாசக உண்மையைச் சிற்றறிவினனாகிய அடியேன் பூரணமாக அறிந்து கூறும் ஆற்றல் சிறிதும் இலனாயினும், திருவோங்குவளப் புதுவை மாநகரின் கண் உள்ள " நந்தி வெளியீட்டு மன்றத்தார். " பணியைச் சிரமேற் கொண்டு, அம் மணிவாசகப்பெருமான் கோகழியை நீந்திக்கரை யேறித் தம்முள்ளே குருதரிசனம் பெற்றுத் தமது தூலம் பூரண அமலமடையுமாறு எற்றம் பெறுதற்கேற்ற அமலப்படிகளின் முதற்

படியாக விளங்கிய மகா திவ்ய க்ஷேத்திரமாகிய திருக்கழுக்குன்றத்தில் மகா வரப்பிரசாத மலை மருந்தாக வீற்றிருக்கும் திரிபுரசுந்தரி சமேத வேதகிரிப் பவரோக வைத்தியன் திருவடித்தாமரைகளையும், அன்னவன் பேரருள் பெற்ற மணிவாசக வள்ளல் திருவடித்தாமரைகளையும் மனமொழி மெய்களால் ஒருவாறு வணங்கி, அத்திருவாசக உண்மையைப் பொருளாகக் கொண்ட இச்சிறிய கட்டுரையை ஒருவாறு எழுதத்துணிந்தனன். அறிவிற்பெரியார் இச்சிறிய கட்டுரையிலுள்ள குறைகளைப் பொருட்படுத்தாது குணங்களையே கொண்டு உண்மையை நாடி உய்த்துரைப்பார் என்னும் உறுதி பெரிதும் உடையேன்.

சற்குருநாதனாகிய எம்பெருமான் அருளால் அடையப்படும் உண்மை நிட்டையாகிய சகச நிட்டையால் இருவினை சொரூபமாக விளங்கும் அசுத்த மாயா தநுவாகிய இச்செடிசேருடலைச் செலநீக்கிப் பிரணவ மந்திர சரீரமாகிய சாவா உடம்பு பெற்று, அஃதாவது அஞ்ஞான பௌதிக தநுவாகிய இம்மருளுடம்பு ஞானசத்தி வடிவமாக மாறுதலாற் சதாசிவப்பேறு எனப்படும் சீவன் முத்திநிலை கைவரப்பெற்று, அச்சரீரத்தோடு உலகுகண்டு போற்ற மறைந்து சிவாங்கமாதலாகிய உண்மைச்சைவமுத்தியே பரம கருணாநிதியாகிய அப்பன் அகில சீவர்களும் உய்யும் பொருட்டுத் தனது அருமைத்திருக்கரத்தால் எழுதி உதவியருளிய தெய்வத் திருமறையாகிய திருவாசகத்தின் உண்மையாகும்.

"உடையா னடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ டுடன்போ வதற்கே
யொருப்படுமின்" (திருவாசகம்—யாத்திரைப் பத்து 5)

என்று பெருஞ் சாத்தாகிய தூலத்தோடு மறைந்து சிவாங்கமாதலாகிய உண்மைச்சைவமுத்திநிலை வெள்ளிடைமலைபோல விளக்கமுறக்கூறியருளப்பட்டமையோடு, இவ் அரிய பெரிய முத்திநிலையை அடையும் பக்குவம் பெற்ற சீவன் பலகோடி சென்ம நற்றவப்

பயனுகச் சற்குரு நாதன் தரிசனம் பெற்று, அவனருளால் இம் முத்திநிலையை அடைதற்பொருட்டுத் தனது சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற் கேற்ற சாதக யோகங்களை உபதேசிக்கப்பட்டு, அவற்றைத் திருவருணைட்டம் வகித்து வழுவறத்தாங்கி ஒழுகிப்படி யேற்றம் அடைந்து தன்னுள்ளே குருதரிசனம் பெற்று முன்னிலை யாசான் தன்னிலையாகிச் செடிசேருடலைப் படிமுறையாற் செலநீக் கித் தான் அவன் ஆகும் உண்மைச்சமாதி கைகூடி ஈனமில் கர்யமாகிய ஓ வடிவம் பெற்றுச் சதாசிவப் பேருகிய சீவன் முத்தி நிலை அடையும்வரை உளவாகும் அநுபவங்களும் இத்திருவாசகத் திருமறையில் பரிபாஷைகளாற் கூறப்பட்டுள்ளன என்றுபெரியோர் கூறுவர். திருவாசகத்தின் உண்மைப்பொருளைப் பூரணமாக உணர்ந்து உணர்ந்தவாறே வழுவின்றி ஒழுகும் மதிப்பொலிவுடை யார் உளராயின், அவர் அதனை அருளிய குருநாதன் அடைந்த உண்மைச் சைவமுத்தி நிலையை உலகு கண்டு போற்றும்படி அடை யாமல் இருக்கமுடியுமா?

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து."

(திருவாசகம்-சிவபுராணம்)

என்பது திருவருளாணையன்றே!

மணிவாசகர் கைக்கொண்டு ஒழுகிய சமயமே உண்மைச் சைவசமயமாதலால் அதன் இலக்கணம் அம்மணிவாசகர் திரு வாக்குக்களாலேயே நன்குணரக்கிடக்கின்றது. அவற்றுட் சில இங் கே காட்டப்படுகின்றன.

## திருவாசகம்

" தன்னே ரில்லோன் றானே யான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி யாட்கொண் டருளி."

( திருவண்டப் பகுதி )

" வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே."

( திருச்சதகம் 2. அறிவுறுத்தல் 15 )

" நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ."

( திருத்தோணோக்கம் 5 )

நிலம் நீர் எரி கால் விசும்பு திங்கள் ஞாயிறு உயிர் என்னும் எண்வகைப் பொருளொடும் புணர்ந்து படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் தனக்கு ஒரு விளையாட்டாகக் கொண்டு நடாத்தி உயிர்களின் பந்தத்தை நீக்கியருளித் தன்னின் வேறாக ஒன்று மின்றித் தானே யாவுமாக விளங்கும் சிவ பரம்பொருளையே முழுமுதற்கடவுளாகக் கொண்டுள்ள உண்மைச் சைவசமயமே மணிவாசகரால் கைக்கொண்டு ஒழுகப்பட்ட சமயமாகும். இதுவே பண்டைக்காலச் சைவம் என்பது பின்வரும் பிரமாணத்தாலும் நன்கு புலப்படும்.

## மணிமேகலை

### 27-சமயக்கணக்கர் தந்திறங்கேட்ட காதை.

“என்றவன் றன்னைவிட் டிறைவன் ஈசனென
நின்ற சைவ வாதிநேர் படுதலும்
பரசுநின் றெய்வ மெப்படித் தென்ன
விருசுட ரோடிய மானனைம் பூதமென்
றெட்டு வகையும் உயிரும்யாக் கையுமாய்க்
கட்டிநிற் போனுங் கலையுருவி னோனும்
படைத்து விளையாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறு தானொன் றிலோனும்
அன்னோ னிறைவ னாகுமென் றுரைத்தனன்.”

சைவம் சகல மதத்தினர்க்கும் சாதியாளர்க்கும் பொதுவானது. சில மரபினர்க்கு மாத்திரம் சிறப்பாக உரியதன்று. சைவம் ஒன்றே அநாதியாக உள்ளது. இதுவே சீவர்கள் கர்மத்திற்கேற்பப் பல மதங்களாகத் திரிந்து வழங்குகின்றது. தன் புலாலுடலைக் கொல்லாது “உற்ற வாக்கையின் உறுபொருள்” ஆகிய ஆசான் தரிசனம் பெற்று அவ் உடலைச் சிவ சம்பந்தமுடையதாக மாற்றினவன் எவனோ அவனே உண்மைச் சைவன் ஆவன். “சைவம் சிவனுடன் சம்பந்தமாவது” என்பது திருமந்திரம் (5-ம் தந்திரம் 16-வது சாயுச்சியம் 1). தான் அற்று நின்ற நிலையே சைவம் என்பர் பெரியார். தற்சுதந்தரம் அற்று இயற்கையோடு ஒத்து நிற்றலாகிய சகசநிட்டையே உண்மையான அன்பும் உண்மைச் சிவ வழிபாடும் ஆகும். அறுபத்துமூவருள்ளும் ஆழ்வாருள்ளும் பல மதத்தவரும் பலசாதியாளரும் தத்தம் இயற்கையை விடாமலே சகச நிட்டையாளராய் உண்மைச்சைவ நிலை கைவரப்பெற்று உண்மைச் சைவ முத்தி அடைந்தமை அறிக. சீவகோடிகள் புண்ணியம்

பாவம் என்பனவற்றின் இயல்பையும் சீவகாருண்யம் இன்னது என்பதனையும் அறிய முடியாமல், இவற்றைப் பகுத்தறியும் மதியில்லாமல், பற்பலவிதமாக அர்த்தத்தை அநர்த்தம் செய்து நூன்முகமாக வெளிப்படுத்தி, அவ் அக்கிரமமான கொள்கைகளையே அநுட்டித்துச் சாதலடைந்தார்கள்; சாதலடைகின்றார்கள். இதுதானு சைவம்? சைவசமயத்தின் இயல்பை நன்குணர்ந்த தத்துவப்பெரியோர்கள் அவ் உண்மைகளை உலகம் அறிந்து உய்யும்படி திருவாசகம் தேவாரம் முதலியனவாக அருளிச்செய்து உண்மைச்சைவமுத்தியின் இயல்பு இதுவென்று நன்கு விளக்கிக்காட்டித் தங்கள் புலாலுடலைக் கொல்லாது சீவகாருண்ய சொரூபிகளாய்ச் சத்தாகிய அவ்வுடலும் சித்தாகிய உயிரும் ஒழிவற ஒன்றிக்குழைந்து அள்ளூறுக்கையாய் நித்தியத்துவம் அடைய அப்பெருஞ்சாத்தாகிய பூந்துருத்தியோடு உடையான் அடிக்கீழ்ப்புகுந்து உண்மைச் சைவ முத்தி அடைந்தார்கள். சீவகாருண்ணிய மூர்த்திகளாகிய அன்னவர் இவ்வாறு தம் சொல்லாலும் அரும் பெருஞ் செயலாலும் மிகத் தெளிவாகக் காட்டியும், பிற்காலத்தில் சந்தானகுரவர் என்னும் பெரும் பட்டத்தைச் சுமந்து கொண்டு சைவசித்தாந்த சண்டமாருதங்கள் எனப்பெருஞ்சாத்துக்களோடு திரிந்த வித்துவான்களே இவ்அரிய பொருளை உணரும் ஆற்றலும் காதலும் இல்லாது சைவ சமயத்தை முற்றும் மாறுக உணர்ந்து புத்தர் சமணர் கொள்கைகள் போல மனோதர்மத்தாற் பல போலிக் கொள்கைகளைக் கண்டுபிடித்து அவற்றை நூன்முகமாக வெளிப்படுத்தித் தூலம் பிணமாக விழச் செத்துப்போவதே முத்தி என்று உறுதிப் பண்ணிவிட்டுத் தாங்களும் அதன் பயனான சாதலையே அடைந்துவிட்டார்கள்.

அன்பே சிவம். சிவமே விஷ்ணு. விஷ்ணுவே சத்தி. சத்தியே சரீரமாகிய உடம்பு. இதன் திறமெல்லாம் ஈண்டு விரிப்பிற்பெருகும். உன்னதமான இச்சரீரத்தையும் கருவிகளையும் இவ்வுலகத்தையும் இதன் கண் உள்ள பொருள்களையும் இறைவன் சீவர்களுக்குக்

கொடுத்த காரணம் யாதென ஆராயுமிடத்து, அச்சீவர்கள் அவ்வ வற்ருல் அறிவு விளக்கம் பெற்று உண்மை கடைப்பிடித்து இறைவனது அருள் விளையாட்டைத் தங்கள் உள்ளும் புறம்பும் ஓவாது கண்டு அத்திருவருளுக்குத் தங்களை முற்ருக உணவாக்கித் தங்கள் சுதந்தரமற்று இயற்கையோடு ஒத்து நின்று ஒப்புரவொழுகி இயற்கை நிட்டை எனப்படும் சகச நிட்டையாளர்களாய் மாயையை அடிப்படுத்தித் தங்கள் அசுத்த மாயா தநுவாகிய தூலத்துள்ள சாதலைத்தரும் அசுத்த நிறை நீங்கப் பெற்றுக் கால அளவு கடந்த நித்திய நிறையாகிய அமல நிறை ஆக்கமுறப் பெறுதலால் சத்தும் சித்துமாகிய அவ்உடலுயிர்கள் ஒழிவற ஒன்றி அள்ளூருக்கையாய்ச் சூக்குமமாய் அருளாய்ச் சிவாங்கமாதலாகிய உண்மைச் சைவ முத்தி அடைதற் பொருட்டேயாம் எனவும், இவ்வாறு இயற்கையோடு ஒத்து நின்று இறைவன் அருள் விளையாட்டை ஓவாது கண்டு ஒப்புரவொழுகி இன்புறும் நெறியறியாது, நிறையில்லாத அவாவினுல் மனதுக்கு அவச்சலனங்களை வருவித்து அதனுல் அறியாமை மேலிட்டு அவ்வறியாமையாகிய யான் எனது என்னும் அகம்பிரமத்தினுல் அவ் இறைவன் தந்த அச்சரீரத்தையும் கருவிகளையும் அவன் கருத்துக்கு மாருக வாட்டி வருத்தித் துற்றவை துறந்த வெற்றுயிராக்கையராய் இயற்றுந் தவமுயற்சி உண்மைப்பயன் அளிப்பதில்லை எனவும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நன்கு விளக்கிக் காட்டுகின்றது இத்திருவாசகத் தெய்வ மறை என அறிக. பின்வரும் திருவண்டப் பகுதி அகவல் அடிகளை உற்று நோக்குவார்க்கு இவ் உண்மைகள் தெற்றெனப் புலப்படாதனவாகா.

“ பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை யொழியச் செய்த வொண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி

அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்ரு இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்ரு ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்ஞெளி கொண்ட பொன்ஞெளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி ஞெளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கெளவி
ஆணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து
வாஞுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும் போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலிற்
ருள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் ருெடர்மின் விடேன்மின்
பற்றுமி னென்றவர் பற்றுமுற் ருெளித்துந்
தன்னே ரில்லோன் ருனே யான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி

அறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பென் புருக வோலமிட்
டலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூ ரெழில்நகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செத்தே னடியேற்
கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரைவித்
துவாக்கடல் நள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கால் தோறுந்
தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழை
குரம்பை தோறு நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ

துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே."

[ இவ்வாறு வேறு யாராவது உண்மையைப் பூரணமாகக் கூறியதுண்டா ? குருநாதன் திருவடி வாழ்க. தான் அடைந்து அநுபவித்ததை அகில சீவர்களும் உணர்ந்து உய்யும்பொருட்டு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்கிக் காட்டி யருளினான் என் அப்பன் மணிவாசகன். ஈதன்றோ உண்மை ! ஈதன்றோ சத்தியம் !! ஈதன்றோ சீவர்கள் பிறவா நெறிகண்டு உய்யும் பொருட்டு எம்பெருமான் அருளவேண்டிய திருமறை !!! இத்திருவாசகத்துக்கு இணையான நூல் வேறில்லை என்பதைச் சொல்லவும் வேண்டுமா? திருவாசகம் மணிவாசகம் ! இன்னும் ஒருகால் அம்மணிவாசகரே இப்பூவுலகத்தில் வந்து இவ்வாறு திருவாய்மலர்ந் தருளமுடியாது என்று கருதியே அன்றே அப்பன் தனது அருமைத்திருக்கரத்தால் இத்திருமறையை எழுதி வைத்தனன் போலும் !! ( நமப் பார்வதீ பதயே ! ஹர ஹர மகாதேவ !! ) ]

மேலே காட்டிய அகவலின் உண்மைப்பொருளை உற்று நோக்குமிடத்துத் தற்காலச் சைவம் பௌத்தம் சமணம் உலகில் வழங்கும் நூல்களாகிய வேதம் ஆகமம் தற்காலச் சைவரால் உந்நத நிலையில் வைத்துப் போற்றப்படும் சாத்திரங்கள் முதலியவற்றின் கொள்கைகளும், சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகள் உபாசனை மந்திரம் தந்திரம் முதலியனவும் உண்மைப்பயன் தருவனவாகா என

நன்கு கண்டித்து ஒதுக்கப்பட்டு அவையாவும் போலியாய் ஒழிய, அவற்ருல் எம்பெருமான் திருவடியை அடையமுடியாது என்பதும், சற்குருநாதனுகிய எம்பெருமான் அருளால் அடையப்படும் சகச நிட்டையே தூலம் அள்ளூருக்கையாய்க் கரைந்து சூக்குமமாய் அருள் வடிவமாக அதனைப்பிரியாத உயிர் சிவாங்கமாதலாகிய உண்மைச் சைவமுத்தி நிலைக்கு இன்றியமையாதது என்பதும் தெற்றெனப்புலப்படுவனவாகும்.

"நீற்றைப்புனைந்தென்னநீராடப்போயென்னநீமனமே
மாற்றிப்பிறக்கவகையறிந்தாயில்லைமாமறைநூல்
ஏற்றிக்கிடக்கும்எழுகோடிமந்திரமென்னகண்டாய்
ஆற்றிற்கிடந்துதுறைதெரியாமலலைகிறையே."

எனப்பட்டினத்தடிகள் அருளியதும் அறிக. பின் வரும் திருமூலர் திருவாக்கும் இவ் உண்மையை நன்கு உறுதிப்படுத்தும்.

"அஞ்சு மடக்கடக் கென்ப ரறிவிலார்
அஞ்சு மடக்கு மமரரு மங்கிலை
அஞ்சு மடக்கில சேதன மாமென்றிட்
டஞ்சு மடக்கா வறிவறிந் தேனே"

(திருமந்திரம் 7-ம் தந்திரம்25—வதுஇந்திந்திரியமடக்குமுறைமை 3)

இதனுல் சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் மெய்யுணர்ச்சியற்றவராதலின் உண்மைநிலை யடையமுடியாது பிறவி வலைப்படுதலும், சகச நிட்டையாளராகிய மெய்யடியார் உலகர்போல் வாழ்ந்து ஒப்புரவொழுகி உண்மைநிலை யடைதலும் நன்கு உறுதிப்படுத்தப்பட்டமை கண்டு கொள்க. இறைவன் அருள் விளையாட்டை உள்ளும் புறம்பும் ஓவாது கண்டு இயற்கையோடு சிறிதும் மாறு

படாது ஒத்து நிற்றலே மெய்யன்பு ஆகும். இத்தன்மை வாய்ந்த வித்தகரே மெய்யடியார் எனப்படுவர். அன்பு இயற்கையோடு மாறுபடாத்தன்மை எனப்பொருள்படும். பின் வருந் திருவாக்கும் இவ் வுண்மையை நன்கு புலப்படுத்தும்.

“அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.”

(திருமந்திரம் 1-ம் தந்திரம் 18-வது அன்புடைமை 1)

“எளிய வாதுசெய் வாரெங்களீசனை
ஒளியை யுன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாய நமவெனுங்
குளிகை யிட்டுப்பொன் னாக்குவன் கூட்டையே.”

(திருமந்திரம் 9-ம் தந்திரம் 6-வது சூக்குமபஞ்சாக்கரம் 1)

[“சிவாய நமவெனுங் குளிகை” என்பது அமல ஐகார ஒலியாகிய வேதமாகும். அமல ஐகாரம்=பூ, நீர் (நார்), எரி, கால், விசும்பு என்பனவாகும். இவையே ஐம்பூதம் எனப்படும் ஐந்துகாரமாகும். ஐந்துகாரம்=ஐந்து அக்கினி. அக்கினியேமூலம்; நடு அரசு. இந்த ஐகாரம் அமலமானது; எக்காலத்தும் இயக்கம் என்னும் அசைவுள்ளது. அவ் அசைவினால் என்றும் ஒலிக்கும் இயல்புடையது. அதனால் ஐகாரமே வேதம் எனப்படும். இது ஆதி எனவும் பெயர்பெறும்; எம்பெருமான் திருவடிக்கு ஆதியாகும். இவ் ஐகாரமே ஞானசத்தி வடிவமாக விளங்கும் நந்தியாகிய குருநாதன் திரு

வடி. இத்திருவடி ஆறூர் கமல மத்தியில் ஓவாது நிறையோடு அசைந்து கொண்டிருக்கும். அசைவு நடனம் ஒலி என்பன ஒன்றேயாம்.

"நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க.
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்கா-தான் தாள்வாழ்க"

என்பது திருவாசகம். இதன் திறமெல்லாம் ஈண்டு விரிப்பிற்பெருகும். இதனைச் சாதக யோகங்களால் அடையப்பெற்ற சகச நிட்டையாளர் தூலமே அசுத்த நிறை நீங்கி அமலமடைந்து சூக்குமமாகும். இது பற்றியே "சிவாய நம எனும் குளிகை யிட்டுப்பொன் னாக்குவன் கூட்டையே" என்று அருளிச்செய்தார் "நந்தி யருளாற் சதாசிவ னாயினேன், நந்தியருளாலே நானிருந் தேனே" (திருமந்திரம் சிறப்புப்பாயிரம் 6-வது திருமூலர் வரலாறு 20) என்றவாறு சகச நிட்டையால் ஈனமில் காயமாகிய ஓ வடிவம் பெற்றுச் சதாசிவப் பேறடைந்து உலக குருவாய் வதிந்த எம் அண்ணலாகிய திருமூலர், மாணிக்க மணியாகிய நங்கண்மணி, என் அப்பன் நாவுக்கரயன், ஞானசம்பந்தன், வன்றொண்டன் என்னும் இவரெல்லாம் பஞ்சகாரம் (பஞ்சாக்கரம்) என்னும் இவ் ஆதி அமல ஐகாரத்தையே 'நமச்சிவாய' 'சிவாயநம' என்னும் கௌணபதங்களால் திருவாசகம் தேவ்ஆரம் என்னும் திருமறைகளில் திருவாய் மலர்ந்தருளினர். இவ்அரிய பெரிய உண்மைகளைத் தத்துவப்பெரியாராகியஅன்னவரேசொல்லாமல் சொல்லியருளினர் என்றால், சிற்றறிவினனாகிய அடியேன் மேலும் விரித்துரைக்கத் தகுமோ.]

"உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூடர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போற் சிந்தை தெளிவார்க்குப்
புரை யற்றிருந்தான் புரிசடை யோனே."

(திருமந்திரம் 9-ம் தந்திரம் 25-வது வரைவுரை மாட்சி 2)

[ சகச நிட்டையால் தூலம் அமலம் அடைந்து "ஊசலாட்டு மிவ்வுடலுயிராயின இருவினை" சமரசப்பட்டுச் சித்தம் சிவமாதல் கைகூடப்பெற்றவரே எம்பெருமானைக்கண்டு அடைந்தவராதல் இதனால் உறுதிப்படுத்தப்பட்டது.]

மேலேகாட்டிய திருவண்டப்பகுதி அகவலில் "திசைமுகன் சென்று தேடினர்க்கொளித்தும்" என்பது முதலாகப் "பற்றுமின் என்றவர் பற்றுமுற் றொளித்தும்" என்பதுவரை உள்ள அடிகளால் சவிகற்ப நிர்விகற்ப நிட்டை முதலியவற்றால் முத்தியடைய முடியாது என்பதும்,

"தன்னே ரில்லோன் றானே யான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி யாட்கொண் டருளி"

என்பது முதலாக இறுதிவரை உள்ள அடிகளால், சற்குருநாதனருளால்அடையப்படும் சகசநிட்டையே,தூலம் அன்னூருக்கையாய் அமலமடைந்து சூக்குமமாய் அருள்வடிவாக உண்மைமுத்தியடைதற்கு இன்றியமையாதது என்பதும் நன்கு உறுதிப்படுத்தப்பட்டன. பின்வரும் திருவாக்கும் இவ் உண்மை நன்கு புலப்படுத்தும்.

"புற்று மாய்மரமாய்ப்புனல் காலே
யுண்டியா யண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணா
மன்ன வென்னையோர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்"

(திருவாசகம் செத்திலாப் பத்து 2)

[தமது தூலம் மண்ணால் அரிக்கப்படாதவாறு சில மருந்துகளை உண்டுஒருவாறு காயசித்திசெய்து சிலகாலம் தவஞ்செய்வாருமுளர். அவர் அடைந்த பயன் யாதும் இல்லையென்றே இச்செய்யுளால் விளக்கிக்காட்டியருளினார் மணிவாசகப்பிரபு.]

சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளால் பிரமை அடையும் உலகமாக்கள் சகசநிட்டையின் இயல்பையும் அதனை உடைய மெய்யடியார் இயல்பையும் உணர்ந்து கொள்வது அசாத்தியமே யாகும். எத்தனையோ குட்டிச் சித்தர்களும் போலிச் சாமிகளும் இந்நிட்டைகளைஅநுட்டித்து இமயம் முதலிய மலைச்சாரல்களிலும் பிற இடங்களிலும் மெய்யுணர்ச்சிஇன்றிப் பிணம்போலக் கிடக்கின்றார்கள். உலகமாக்கள் இவர்களையே சைவர்கள் என்றும் சித்தர்கள் என்றும் மயங்குகின்றார்கள். வெள்ளையர்களும் இவர்களைக் கண்டு மருளுகின்றார்கள். இயற்கையின்திறன் அறிந்து உலகர்போல் வாழ்ந்து ஒப்புரவொழுகும் நெறியறியாது கல்லும் மரனும் போல அசைவற்று மெய்யுணர்ச்சியின்றிக் கிடக்கும் சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் அந்நிலையிற் பலகாலம் கிடப்பினும் இறந்து பிறப்பவரே என்பதும், இந்நிட்டைகளை அநுட்டித்து முடித்துமேல் உண்மைநிலையடையும் பக்குவமுடையவரே சகச நிட்டைக்குரிய உபதேசம் பெறுதற்கு அருகராவர் என்பதும், சகச நிட்டையாளரே அருளமுதம் அருந்தித் தமது உடல் அள்ளூறுக்கையாகிச் சூக்குமமாய் அருள்வடிவாக உண்மைச் சைவ முத்தியை அடைவார் என்பதும் பின்வரும் பிரமாணங்களாலும் நன்கு புலப்படும்.

## அப்பர் தேவாரம்

"நன்றுநோக்கிலென்பட்டினியாகிலென்
குன்றமேறியிருந்தவஞ்செய்யிலென்

சென்றுநீரிற்குளித்துத்திரியிலென்
என்றுமீசனென்பார்க்கன்றியில்லையே"

(பாவநாசத்—திருக்குறுந்தொகை.8)

"ஞானத்தாற்றொழுவார்சிலஞானிகள்
ஞானத்தாற்றொழுவேனுனைநானலேன்
ஞானத்தாற்றொழுவார்கடொழக்கண்டு
ஞானத்தாலுனைநானுந்தொழுவனே."

(தனித் திருக்குறுந் தொகை.2)

(ஞானத்தாற் றொழுதல் என்பது சகச நிட்டையை உணர்த்தி நின்றது.)

## திருமந்திரம்

"எண்ணா யிரத்தாண்டு யோக மிருக்கினும்
கண்ணா ரமுதனைக் கண்டறி வாரில்லை
உண்ணாடி யுள்ளே ஒளிபெற நோக்கில்
கண்ணாடி போலே கலந்திருந் தானே."

(3-ம் தந்திரம் 7-வது தியானம் 6)

## அருணகிரிநாதர் பாடல்

"துருத்தியெனும்படிகும்பித்துவாயுவைச்சுற்றிமுறித்
தருத்தியுடம்பையொறுக்கிலென்ஞ்சிவயோகமெனுங்
குருத்தையறிந்துமுகமாறுடைக்குருநாதன்சொன்ன
கருத்தைமனத்திலிருத்துங்கண்டீர்முத்திகைகண்டதே"

"காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுத மிகவெளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே."

(கந்தரலங்காரம் 71, 85)

"காவியுடுத்துந்தாழ்ச்சடைவைத்துங்காடுகள்புக்குந்தடுமாறிக்
காய்கனிதுய்த்துங் காயமொறுத்துங் காசினிமுற்றுந்திரியாதே"

"அநித்தமானஊனுளுமிருப்பதாகவேநாசி
அடைத்துவாயுவோடாதவகைசாதித் [காமல்"
தவத்திலேகுவான்மூலிபுசித்துவாடுமாயாசஅசட்டுயோகியா

(திருப்புகழ்)

[ இவற்றால் சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் முத்தி யடைதல் முற்றாக அசாத்தியம் என்பதும், ஒருவாறு காயசித்தி செய்து வாயுவை வலிதிற்றடுத்துத் தவம் புரிவார் அசட்டு யோகிகள் என்பது நன்கு புலப்படும். அநித்தமான ஊன்-சாதலைத்தரும் அநித்திய நிறை யாகிய அசுத்த நிறை யமைந்த மருளுடம்பு. ]

"செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே

(கந்தரனுபூதி 12)

[இதனால் சகச நிட்டைக் குரிய மௌனோபதேசம் பெற்ற மையும், அதனால்மனமானது சமஷ்டியில்வியஷ்டியாய்வியாபித்துக்

கெட்டுப்போகாமல்,சமஷ்டியில் சமஷ்டியாயே வியாபித்தற்குரிய பேரின்பத் தடம் புகுந்தமையுங் கூறப்பட்டன.]

சகச நிட்டையானது ஓங்காரத் துட்பொருளாகிய மகார வித்தை என்னும் மௌன மந்திராதிக்ய வித்தையைச்சற்குருநாதன் அருளாற் பெற்றுப் பயின்று பருகுவதால் அடையப் படுவதாகும். மனக்குரங்கானது எவ்விடத்துந் தாவிச் சம்ஷ்டியில் வியஷ்டியாய் வியாபித்துக்கெட்டுப்போகாமல்சமஷ்டியில்சமஷ்டியாயேவியாபகம் பெறுதற் குரிய பேரின்பத் தடம் புகச் செய்யும் பெருங் கருவியாயும் பேரின்ப இடமாயும் பொருளாயும் விளங்கா நின்றது இவ் எழில் பெறு மகாரம் என்று அறிய வேண்டும். இதனைக்குறித்துச் சித்தர் பெருமானாகிய சட்டை முனிவர் அருளிக் கூறியது இங்கே காட்டப் படுகின்றது.

"மௌனவித்தையேதென்றால்மூன்றெழுத்தென்பார்
மாட்டுகிறஇனங்காணார்மார்க்கங்காணார்
மௌனவித்தையாவதென்னவாய்மூடலென்பார்
மாடுமுதற்குதிரையினாலாவதென்ன
மௌனவித்தைகேட்டிருப்பார்கூட்டுறவுகாணார்
வாய்மூடிவழியோடேநாதங்கேளார்
மௌனவித்தையாசான்றன்துண்டிக்காட்டில்
மணிமுதலாய்த்தசநாதங்கேட்குந்தானே."

இவ்வாறு சித்தர் நூல்களில் மகார வித்தையே பல பரி பாஷைகளால்முக்கியமாக் கூறப்படும். இதுஅரிய பெரியஇரகசியம். இதனைக் குருவருளால் அறிந்து பயிலாதவன் பேரின்பத் தடம் புக முடியாது. தூலத்தோடு மறைந்து வேதாந்த சித்தாந்த உண்மைச் சைவ முத்தியடைந்த எத்தனையோ இருடிகளும், முனிவர்களும், மணிவாசகப் பெருமானும், அறுபத்து மூவரும், ஆழ்வார் என்னுங்

திருநாமத்துக்கு இலக்கியமானோர் பலரும், பட்டினத்தடிகள், பத்திரகிரியார், சேந்தனார், முத்துத்தாண்டவர் என்பவர்களும் இம்மகார வித்தையை எம்பெருமான்பாற் பெற்றுப் பயின்று சகசநிட்டை கைவரப் பெற்றவரே என்பதில் ஐயமில்லை. மகார வித்தையை அநுபவமாக உணர்ந்தவர் தம்முயற்சியால் நிட்டை கூடுவதில்லை. இவர் பற்றற்றவராய் உலகர்போல் வாழ்ந்து ஒப்புரவொழுகுபவரேயன்றிக் காடு மலைகளிலும் பிற இடங்களிலும் "துற்றவை துறந்த வெற்றுயிராக்கை" யராய் மெய் யுணர்ச்சியின்றிப் பிணம்போலக் கிடக்கும் அசட்டு யோகிகளாகார். மணிவாசகப் பெருமானுக்குத் திருப்பெருந்துறைக் குருநாதன் உபதேசித் தருளியதும் சகச நிட்டைக்குரிய இம்மகார வித்தையே என்பது திருவாசகம் (அச்சோப் பதிகம் 2, 7; செத்திலாப் பத்து—2) செய்யுட்களால் அறியப்படும். இதனை அடைதற்குரிய சாதாக யோகங்களை எம்பெருமான் உபதேசித் தருளியமை "அருங்கற்பனை கற்பித்து ஆண்டாய்" (ஷை கோயின்மூத்த திருப்பதிகம் 7) எனவும் "நோக்கிநுண்ணிய கொடியன சொற் செய்து" (ஷை அதிசயபத்து 8) எனவும் "பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி உய்யுநெறிகாட்டு வித்திட்டு" (ஷை அச்சோப் பதிகம் 7)எனவும் பிறவுமாக வரும் திருவாக்குக்களால் அறியப்படும். இவ் உண்மைகளை உணராது மணிவாசகர் சரித்திரம் எழுதியபிற் காலத் தவராகிய பௌராணிகர், அம்மணிவாசகர் பாடல்களுக்கும், அவர் ஒழுக்கத்துக்கும், அவர் அடைந்த உண்மைச் சைவமுத்தி நிலைக்கும் முற்றும் முரண்படுமாறு திருப்பெருந்துறைக் குருநாதன் அம்மணிவாசகருக்குச் "சிவஞானபோத" சூத்திரங்களைப்பாடஞ்சொல்லி விளக்கி விட்டனர் என்று தம்மனம்போனவாறு கூறிவிட்டனர். தத்துவப்பெரியார் ஒழுக்கங்களை அறியும் ஆற்றலும்காதலுமில்லாது அவர்சரித்திரங்களை எழுதத் துணியும் வித்துவப் பெரியாராகிய பௌராணிகர் அவற்றைத் தம் மனம் போனவாறு கூறிவிடாது வேறுஎன்செய்வார்? மணிவாசகர்

அந்நூலைப் பாடங்கேட்டது உண்மையாயின் தாம் அருளிய பாடலில் அதனைச்சிறப்புறக்கிளந்து கூறாது விடுவாரா? தாம் கைக்கொண்டு ஒழுகித் தமது தூலம் பூரண அமலமடைந்து அதனோடு மறைந்து உண்மை முத்தி அடைதற்குரிய சாதகயோக விதிகள் அமைந்த அந்நூலையே அகில சீவர்களும் அறிந்து உய்தியடையுமாறு கிளந்து கூறிப்பாராட்டாது வேறு எதனைத்தான் அம்மணிவாசகர் பாராட்டவேண்டும்? தாம் கடைத்தேறுதற் குரிய சாதக யோக விதிகள் அமைந்த சாத்திரங்கள் அக்காலத்தும் உளவாயின் அவர் பின் வருமாறு பாடியருளுவாரா?

"உவலைச் சமயங்க ளொவ்வாத சாத்திரமாஞ்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளுஞ்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ."

(திருவாசகம் திருத்தெள்ளேணம் 17)

இதனால் ஒருவன் முத்தியடைதற் கேற்ற சாதக யோக விதிகள் உலகில் நூல்களாக வழங்குதல் அசாத்தியம் என்பதும், அவை காலந்தோறும் அவ்வப்பக்குவ சீவருக்கே அவரவர் சுடபே தம் கர்ம பேதங்களுக்கு ஏற்றவாறு சற்குருநாதனாகிய எம்பெருமானால் அருளப்படும் என்பதும் நன்கு புலப்படும். இதுபற்றியே "பத்தியாலடையும் அங்கலிங்கயிக்கம் பகர்ந்திடும் உபநிடமின்றும்" (செ. 4) எனச் சுத்தசாதகமும் கூறியது என அறியவேண்டும். சத்தாகிய உடலும் சித்தாகிய உயிரும் ஆகிய உபயமும் நேசித்து அஃதாவது ஒழிவற ஒன்றி அள்ளூறுக்கையாய்ச் சூக்குமமாய் நித்தியத்துவம் அடைதற்கேற்றவாறு எம்பெருமான் அருளும் விதிகளே உபநிசத்துக்களாகும். உபய + நேசித்தது = உபநிசத்து. இச் சொல் காலக்கிரமத்தில் பலவாறு மருவிப் பலபொருள் கூறப்

பட்டு வழங்கினும், அவையாவும்மேலேகூறிய உண்மைப்பொருளில் அடங்குதல் அறிக.

மகார வித்தையின் இயல்பு எம்போலிய சீவர்களால் அறிந்து இயம்ப ஒண்ணாதது; சகச நிட்டையாளராகிய தத்துவப்பெரியார்க்கே யன்றி மற்றைய சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர்க்கு எட்டாதது. சகச நிட்டை யாதோர் குறிப்பும் இல்லாதது. சகச நிட்டையாளர்க்கும் சாமானிய உலகத்தவர்க்கும் வேறுபாடு தெரிவிக்க முடியாது. அவர் எவ்வகையான பற்றும் அற்றவராதலின் அஃதாவது விருப்பும் வெறுப்பும் இல்லாதவராதலின் மூன்னிலைக் கோரணிகளுக்கு அஞ்சியும் பிறவாறும் வேடம் முதலியனவற்றால் உலகமாக்களின் வேறாகத் தம்மைக்காட்டுபவராகார். அவர் ஒழுகங்களை உலக மாக்கள் அறிய மாட்டார். அவர்போன்றவரே அவரை அறிவர். முன்னிலைகளால் இடையூறு நேர்ந்துழி எம்பெருமான் அருளால் நிகழும் புதுமைகளாலும் முத்திநிலையாலுமே அவரைத் தத்துவப் பெரியார் என்று உலகு கண்டிடும் என அறிக. சகச நிட்டை யாதோர் குறிப்பும் இல்லாதது என்பதும், அந்நிட்டையாளர் இயல்பும் பின் வரும் பட்டினத்தடிகள் திருவாக்கானும் நன்கு புலப்படும்.

"வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாத புட்ப மிறையாத தீர்த்த மினிமுடிந்து
கட்டாத லிங்கங் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூசை யன்றோ குருநாதன் மொழிந்ததுவே."

"மாயநட் போரையு மாயா மலமெனு மாதரையும்
வீயவிட்டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்று பின்றாதையைக் கூடிப் பின்றாயைமறந்
தேயுமதே நிட்டை யென்றானெழிற் கச்சியேகம்பனே."

"மாத்தான வத்தையு மாயா புரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்கொரு நிட்டை யுண்டோ நித்தனன்பு கொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத்தவர் போலிருப்பர் பற்றற்றவரே"

["நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ" என்பதில் "நிட்டை என்பது குறிப்போடு கூடி முயற்சியால் அடையப்படும் சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளை உணர்த்தி நின்றது. இதனுல் சகச நிட்டையாளராகிய மெய்யடியார் உலகர் போல் வாழ்ந்து ஒப்புர வொழுகுதல் கூறப்பட்டது. இச்சகச நிட்டையை அறியும் ஆற்றலும் காதலுமில்லாது உலக குரவராகத் தம்மை மதித்து மருளுடம்போடு வெளிப்பட்ட போலி வேதாந்த சித்தாந்த சாத்திர நிபுணர், உலக விவகாரம் வேறு முத்தியடைதல் என்னும் விவகாரம் வேறு என உழறிக்குழறி "மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்கும் சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை" (சிவஞான போதம் சூத்திரம் 12, வெண்பா 2) வினைமேவுதற்கு இடமாம் என்று உலக மாக்களை வெறுத்து ஒருபால் ஒதுங்கி ஆலயத்தையும் வேடத்தையுமே அரனெனத் தொழவேண்டும் எனவும் அதுவே சீவன் முத்தர் இலக்கணமும் முத்தி சாதனமுமாம் எனவும் முடிவு செய்து விட்டனர். மருளுடம்பினராய்ப் பாசங்கள் பற்றுக்கள் சிறிதும் நீங்காதஇவ்வித்துவான்கள்விருப்பும் வெறுப்பு முடையார் பற்றற்றவராகார் என்பதனை அறிய முடியாமையும் வியப்பன்று.]

தூலகற்பம் உண்டு ஆறறிவு பூரணம் பெற்ற மானுடராதல் கைகூடி எம்பெருமான் திருவடி எனப்படும் சூக்குமகற்பமாகிய அமல ஐகார ஒலியை அடையப்பெற்ற சகச நிட்டையாளரே அயன் கையெழுத்தைக் கிழித்துக் காலனை உதைத்து அஃதாவது மருளுடம்பாகிய தூலத்துள்ள சாதலைத்தரும் அசுத்த நிறையை

அழித்து அதனைச் சாவா உடம்பாகிய பிரணவ மந்திர சரீரமாக மாற்றி நித்தியத்துவம் அடைபவராவர். மார்க்கண்டேய முனிவர் பொருட்டு எம்பெருமான் காலனைக்காலால் உதைத்தருளினர் என்பதன் உண்மைப் பொருளும், அம்முனிவர் சாவா உடம்பு பெற்று நித்தியராயினர் என்பதும் ஈண்டு நோக்கற்பாலன. "அவன் கால் பட்டழிந்ததிங் கென்றிலை மேலயன் கையெழுத்தே" எனவும், "மௌனத்தையுற்று, நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண், டென்னை மறந்திருந் தேனிறந்தே விட்ட திவ்வுடம்பே" (கந்தரலங்காரம் 40,19) எனவும் அருணகிரி நாதர் அருளியதும் அறிக. இவ்வுண்மையையே மணிவாசகர் பின் வரும் திருவாக்கால் காட்டியருளினர்.

"தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புர முந்தீபற."

(திருவாசகம் திருவுந்தியார், 3)

இங்கே "அடி" எனப்பட்டது சகச நிட்டையாளர்க்குரிய சூக்கும கற்பமாகிய வேத ஒலியாகும். சாம கானமும் இதுவே. சுத்த சாதகமும் இதனையே அருளமுதம் எனக்கூறிற்று. இது சிவ சந்நிதானத்தில் ஒலிப்பது. இவ்வுண்மை பின் வரும் திருவாக்கானும் நன்கு புலப்படும்.

"இன்பான் மொழிக்கிள்ளா யெங்கள் பெருந்துறைக்கோன்
முன்பான் முழங்கு முரசியம்பாய்—அன்பாற்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை."

(திருவாசகம் திருத்தசாங்கம் 3)

"அரவொலியாகமங்கள் அறிவாரறி தோத்திரங்கள்
விரவிய வேதவொலி விண்ணெலாம் வந்தெதிர்ந்திசைப்ப"

(சுந்தரர் தேவாரம் திருநொடித்தான்மலை 8)

எனத்தம்பிரான் றோழரும்,

"தயங்குசோதிசாமவேதாகாமனைக்காய்ந்தவனே
மயங்குகின்றேன்வந்துநல்காய்வலிவலமேயவனே"

(திருவலிவலம்—பண்—பழந்தக்கராகம். 2)

எனத் திருஞானசம்பந்தர் பெருமானும் அருளியவைகளாலும் இவ்வுண்மை உணரப்படும். குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தைக் காணுமற் கண்டு அருளமுதம் உண்ணும் சகச நிட்டையாளரே "அச்சு" முறியப்பெற்றுத் தமது தூலம் அள்ளூறுக்கையாய்க் கரைந்து மும்மலமும் நீங்கிச் சூக்குமமாய் அருள் வடிவமாக உலகு கண்டிட மறைந்து உண்மைச் சைவமுத்தி அடைபவராவர்.

"முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை ஆரறி வாரே."

(திருமந்திரம் 2-ம் தந்திரம் 2-வது பதிவலியில் வீரட்டமெட்டு 5)

என்பதினுலும்.

"தெருளுமும்மதில்நொடிவரையிடிதரச்சினப்பதத்தொடுசெந்தீ
அருளுமெய்ந்நெறிபொய்ந்நெறிநீக்கியஅதிசயங்கண்டாமே."

(திருவாசகம் அதிசயப் பத்து 10)

என்பதனுலும் " அழிந்தன முப்புரம் " என்பதன் மறைபொருளேஉணர்ந்து கொள்க .சகச நிட்டையாளர் உடலில் அமல நிறையாகிய உண்மைச்சத்துவம் சத்துவமாகியகந்தழிகந்தழியாகிய சிவம் குடிபுகுவதால் அசுத்த நிறையாகிய பாசம் படிமுறையான் ஒழியப் பெறுதல் திருவாசகம் (திருவம்மானை 14; நீத்தல் விண்ணப்பம் 21 திருக்கோத்தும்பி 19; கோயிற்றிருப் பதிகம்1,2,3,5,6,7,10; அதிசயப் பத்து 8,9,10; குலாப்பத்து 3,6; அற்புதப் பத்து 8) செய்யுட்களால் நன்கு புலப்படும்.

நாதங்களாகிய வேதங்களும் ஆக்கமுற்று ஒடுங்கிய போது தான் பூரணமான சகச நிட்டை கைகூடும் . இவ்வுண்மை மணிவாசகர் அருளிச் செய்த திருப்படையாட்சி என்னும் திருப்பதிகத்தால் நன்கு உறுதிப் படுத்தப்பட்டது. மணிவாசகர் திருப்படை யாட்சி 4 வது செய்யுளில் "நன் மணி நாத முழங்கியெ னுள்ளுற நண்ணுவ தாகாதே " என்று கூறியருளி "என்னையுடைப்பெருமானருளீசனெழுந் தருளப் பெறிலே" என்று முடித்தருளினர். 6 வது செய்யுளில் "வீணைமுரன் றெழுமோசையி லின்ப மிகுத்திடு மாகாதே" என்று கூறியருளி " என்னைமுன்னுளுடையீசனெனத்த னெழுந்தருளப் பெறிலே " என்று முடித்தருளினர். 7 வது செய்யுளில் "சொல்லிய லாதெழுதூ மணியோசை சுவைதரு மாகாதே"என்று கூறியருளி"இந்து சிகாமணி யெங்களையாள எழுந்தரு ளப்பெறிலே"என்று முடித்தருளினர், 8 வது செய்யுளில் "சங்குதிரண்டு முரன்றெழுமோசை தழைப்பனவாகாதே" என்று கூறியருளி " ஈறறி யாமறை யோனெனையாள எழுந்தருளப்பெறிலே"என்றுமுடித்தருளினர். ஆசான் வெளிப்பட்டுச்சீடனுக்குமலபரிபாகம்உண்டாக்கிஅவனுட்புகுந்துஅவனுக்குள்எதிர்ப்பட்டு எதிர்ப் பட்ட போது அவனே தானுய் தான் அவனுய் எழுந்தருளுகின்ருன் என முறையே "வெளிப்படு மாயிடிலே " , " என்னுள் புகுந்திடிலே " " எதிர்ப்படு மாயிடிலே " " எழுந் தருளப் பெறிலே " எனக் கூறியருளியதும் உய்த் துணர்தற் பாலது . மேலே கூறியவைகளால் பெறப்படுவது யாது ? மணிவாசகர் தம்

முள்ளே நாதங்களாகிய வேத ஒலிகளைக் கேட்டு எம் பெருமான் தம் முள்ளே வெளிப்பட்டுப் பூரணமாக எழுந்தருளப் பெறுதல் கைகூடில் இன்ன இன்னநாதவொலி இன்ன இன்ன தன்மை யுடைய தாக உணரப்படும் எனப் புலப்படுத்தி யருளினர் என்பதே யாகும். இன்னும் " ஆகாதே " " ஆகாதே " எனக் கூறியதனல் அவை யெல்லாம் ஆக்க முற்று ஒடுங்குவதுஇயற்கை என்பதுநன்கு பெறப் படும். "இயற்கையை விட்டிடலாகா"எனச்சுத்தசாத்தகமுங்கூறிற்று. இவ்வளவும் திரோதானத்தின் ஆட்டமாகும், திரோதானம் தொலை ந்த இடமே நாதங்கள் ஒடுங்கிய நாதாந்தமாகிய வேதாந்தவீடு ஆகும். இவ்விடமே பாசங்கள் பற்றுக்களும் நான் என்னும் முனைப்பும்அற்று மாயை தொலையும்இடமுமாகும்.தன்னுள்ளே ஆறங்கங்களையும்கண்டு கடந்து நாதங்களாகிய வேதங்களைக் கேட்டதொண்டனுகிய தமிழன் நாதாந்தப்பிழம்பு எனப்படும் சோதிப்பிழம்பாகிய ஆரியனைக் கண்டு ஆரியனுகும் இடமும் இதுவேயாகும். இதுபற்றியே "பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே" (சிவபுராணம்) என்று அருளிச் செய்தார் மணிவாசகப் பிரபு, " ஆரியன் ரேூற்றமுன் அற்ற மல ங்களே " (திருமந்திரம் 1 - வது தந்திரம் உபதேசம் 5)எனவும், "அண்ணலழிவின்றி யுள்ளே யமர்ந்திடும்,அண்ணலைக் காணில் அவ னிவனுமே" (ஷை 9 ம் தந்திரம் ஞான குரு தரிசனம் 5 ) என வும் வருவனவற்றையும் நோக்குக. இதன் திறமெல்லாம் ஈண்டுவிரி ப்பிற் பெருகும். சத்தாகிய உடலும் சித்தாகிய உயிரும் கூடிக் குழைந்து ஒன்றுங்கால் உளவாகும் இயக்கமாகிய இவ் ஒலியையே அருட் குரு என வேதம் முறையிடுகின்றது. வேதமாகிய ஆசான் ஆசானுகிய சிவம் முறையிடுகின்றது. " ஓசையும் ஈசன் உணரவல் லார்க்கே " ( திருமந்திரம் 3-ம் தந்திரம் 1—வது அட்டாங்கயோகம் 7 தியானம் 60 )எனவும்," பாடியெழுகின்ற வேதாகமங்களும், நாடி யினுள்ளாக நான் கண்டவாறே " ( ஷை 8 ம் தந்திரம் 3 வது அவ த்தைபேதம் 11 வது நின்மலாவத்தை 176 ) என்வும் எம் அண்ண லாகிய திருமூலர் அருளியதும் அறிக. " ஞானவாளேந்து மையர்

நாதப்பறையறைமின் " (திருவாசகம் திருப்படையெழுச்சி 1) எனவும் "ஓசையால் உணர்வார்க்கு உணர்வரியவன் உணர்வு தந்து ஒளியாக்கி" (ஷை அற்புதப்பத்து 8)எனவும் மணிவாசகர் அருளியவற்றின் உண்மையையும் உணர்ந்து கொள்க. மேலே கூறியவாறு பூரணமான சகச நிட்டையின் இலக்கணம் திருப்படை யாட்சியில் நன்கு விளக்கப் பட்டமை அப்பதிகப் பொருளை நுண்ணுணர்வாற் கண்டு தெளிவார்க்கு நன்கு புலப்படாததாகாது. இவ்அரிய பெரிய நிலைக்கும் சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர்நிலைக்கும்உள்ள இடையீடு இத்துணையதென இயம்ப ஒண்ணாதது. இவ்வுண்மைகளை அறியாத சாத்திர நிபுணர் பிணமாக விழுதற்குரிய மருளுடம்பினர்களாகிய சீவர்களையே சீவன்முத்தர்கள்என்று தமது போலிச் சாத்திரவாயிலாகஉறுதிப்பண்ணிவிட்டுத்தாமும்சீவத்துவம்நீங்கப்பெறும் வழியறியாது இறந்து பிறவி வலைப்படுவாராயினர். சகச நிட்டை கைவரப்பெற்றுத் தூலம் அமலமடைந்து சூக்குமமாதலாகியபிரணவ மந்திர சரீரம் பெற்றுச் சீவன் முத்தி நிலை கைகூடுதற் கண் உள்ள அருமை சீவர்கள்சிந்தனைசொற் செயல்களுக்குஅளவுபடுவதாகுமா? அயன் கையெழுத்தைக் கிழித்துக் காலனைஉதைத்துநித்தியத்துவம் அடைவது என்றால் எளிதின் முடியுமா? வாய்ப்பேச்சா? அசுத்த நிறை நீங்கித் தூலம் பூரண அமலமடைந்து சூக்குமமாக அதனோடு மறைந்து உண்மை முத்தி யடைதல் பலகோடி சென்ம நற்றவப் பயன் திரண்டு ஒருவடிவெடுத்த வித்தகர்க்கே யன்றி ஏனையோர் கல்வியில் எத்துணை வல்லபம் படைத்தவரே யாயினும் அவருக்கு முற்றாக அசாத்தியமே என்பது சொல்லாமலே அமையும். தம்முள்ளே குருதரிசனம் பெற்று அசுத்த நிறையாகிய செடிசேருடலை செலநீக்கி அமல நிறை ஆக்க முறப்பெற்றுப் பிரணவ மந்திர சரீரம் பெறுதற் கண் உள்ள அருமையைப் புலப்படுத்தும் திருவாசகம் (திருச்சதகம் ஆத்துமசுத்தி 8; கைம்மாறு கொடுத்தல் 4; அநுபோகசுத்தி 4,5,6 ஆனந்தபரவசம் 3; செத்திலாப்பத்து 1,5 ஆசைப் பத்து 2,3; குழைத்தபத்து2 )செய்யுட்களை கண்டு தெளிக. இவ்வாறு அசுத்த நிறையமைந்த மருளுடம்பைப் பிரணவ மந்திர

சரீரமாக மாற்றி நித்தியத்துவம் அடையவேண்டும் என்னும் அரிய பெரிய உண்மையையே சகல சீவராசிகட்கும் உரியனவாய் எம் பெருமான் வடிவம் எனப்படும் நித்திய வேதாகம சாரமாக எழுந்த தத்துவப்பெரியார் பாடல்கள் முறையிடுவனவாகும். மருளுடம்பைப் பிரணவமந்திரசரீமாகமாற்றும்வகையறியாது அம்மருளுடம்பு பிண மாக நிலத்துட் புதைக்கப்படவும் சுடப்படவும் விட்டு முத்தியடை தல் என்பது முயற்கொம்பாகும். "மாற்றிப்பிறக்க வகையறிந்தா யில்லை" எனப்பட்டினத்தடிகள் அருளியதும் அறிக. போலி வே தாந்த சித்தாந்த சாத்திர நிபுணர் இவ்வுண்மையை அறிந்து தமது நூல்களில் ஒருசிறிதும் கூறிற்றிலர் என்பது யாரும் அறிந்த உண் மையாகும். உலகமாக்கள் உண்மை முத்தியின் இலக்கணத்தை அறியாது இடர்ப்படுவதற்கு இவ்அசட்டுப் போலிச்சாத்திரங்களே காரணமாயின என்பதனை ஈண்டு விரித்தல் மிகையாகும்.

எம்பெருமான் ஒருவன் உடலிற்குடி புகுவதாயின், அவனி டத்துள்ள அசுத்த நிறையின் காரியமாகிய காமம் கோபம் முதலிய குணங்கள் தங்கள் இயல் கெட்டுச் சத்துவமாக மாறிவிடும். உண் மைச்சத்துவமே சிவம். உண்மைச்சத்துவமுடையார் அசுத்தநிறை நீங்கப்பெறுதலால் தூலம் பிணமாக விழ இறந்து பிறவி வலைப்பட மாட்டார். லௌகீக தந்திரமாகிய சத்துவம் மௌனம் என்பன போலியாகும். இதன் திறமெல்லாம் ஈண்டு விரிப்பிற்பெருகும்.

இருவினையுங் கெட்டுத்திரிந்தபோது இருவினை சொரூபமா கிய உடல் உயிர் இல்லையாகும். அஃதாவது உடல் சூக்குமமாய் அருள்வடிவான சத்தியாக அதனைப்பிரியாது அநாதியே அதனோடு சம்மந்தமான உயிர் சிவமாகும் (சிவாங்கமாகும்) என்பது. இதுவே இயற்கை முறையான உண்மைச்சைவ சமய முத்தியாகிய வித்த கச்சமய முத்தி என அறிக, "ஊசலாட்டு மிவ் உடல் உயிராயின இருவினையறுத்து......உணர்வுதந்து ஒளியாக்கி" (திருவாசகம்) எனவும் "ஊன் உயிர் வேறு செய்தான் நொடித்தான் மலையுத்த மனே" (சுந்தரர் தேவாரம்) எனவும் வரும் பிரபல சுருதிகளின்

உண்மைப்பொருளையும் நோக்குக. உடம்பு உயிரும் ஒன்றேயாம். அவை பிரியாமல்பிரிந்து காட்டும். அவைஒன்றற்கொன்று இன்றிய மையாதன. உயிர் மெய்களின் அந்நியோன்னிய சம்பந்தம் அநாதியாய் உள்ளது. சீவன் இருவினையாலாகிய சரீரம் மனம் முதலியனவாய் வெளிப்படுமன்றி வேறுவகையாக வெளிப்படாது. உயிர் என்பது ஒன்று உடம்பினைவிட்டு வேறாக நிற்றல் அசம்பாவிதம் என்பது "உடம்பினாலன்றி உணர்வுதானில்லை, உடம்பினால் உன்னியதேயாம்" எனவரும் ஔவையார் திருவாக்கால் (ஔவைகுறள்) நன்கு புலப்படும், இவ்வுண்மை திருமந்திரம் (2-ம் தந்திரம் 5-வது சரீர சித்தியுபாயம் 1;7ம்-தந்திரம் 28-வது கூடாவொழுக்கம் 12) செய்யுட்களால் நன்கு உறுதிப்படுத்தப்பட்டது.

ஏனைய செய்யுட்கள் விரிவஞ்சி விடப்பட்டன, அத்திருமறையுட் கண்டு தெளிக, தேகத்தில் விளங்கும் அசைவு சீவ அசைவாகும். இருவினையால் அசைவு உளதாயிற்று. சீவ அசைவு இல்லாதவிடத்துப் பஞ்சேந்திரிய வினையில்லை. அசைகின்றது அசையாவிடில் அசைவு இறந்தது என்று கூறலாம். அதாவது சத்தும் சித்துமாகிய மெய் உயிர் அற்றன என்பது. இவ் அசைவு அற்றதே சாதல் எனப்படும். இவ்அசைவு அற்ற அசத்தாகிய பிணம் உடலம் சரீரம் எனப்படுதல் உபசாரமேயாகும். தூலம் பிணமாக விழ இவ்வாறான சாதலை அடைந்தோர் பூரணப்படாமையாற் பிறிதோர் தூலத்தைப் பற்றிப் பிறவிவலைப்படுவதேயன்றிப் போலிச் சாத்திரங்களின் கொள்கைப்படி முத்தியடைதல் என்பது அசம்பாவிதமேயாகும். "மேலொருவடிவை எடுத்ததேயாகில் மேவுமிவ் உடல் இங்கே வீழும்" என உலக மாதாவாகிய பெரியநாயகியம்மை குமாரதேவர் வாக்கில் நின்று கூறியருளிய சுத்தசாதகச் செய்யுளாலும் (செ 19) இவ்வுண்மை பசுமரத்தாணிபோல் நன்கு உறுதிப்படுத்தப்பட்டது. சத்தால் சித்தும் சித்தால் சத்தும் அறியப்பட்டன. சத்தாகிய மெய்யினிடத்தேயே அசைதலாகிய வினை காணப்பட்டது. ஆதலால் சத்தும் சித்தும் கூடியவிடத்து அசைவாகிய வினைதோன்

றிற்று. இரண்டும் கூடாதவிடத்து அதாவது இரண்டும் இல்லாத விடத்துஅசைவாகிய வினையில்லையாகும். சத்தில்லாமல் சித்தில்லை. சித்தில்லாமல் சத்தில்லை. மெய்யில்லாமல் உயிரில்லை. உயிரில்லாமல் மெய்யில்லை. உயிர்சுத்தமடைந்து சிவமாகும்போது, அநாதியே அதனோடு சம்பந்த முடையதாய் அமலமடைந்த உடல் எத்தன்மையை அடையவேண்டும்? அஃதும் சிவாங்கமாகிய அவ் உயிரோடு சம்பந்தமுடையதாய் அருள் வடிவான சத்தி யம்சமாகவே திகழும் என்பது சொல்லாமலே அமையும். (சுத்த சாதகம் செ, 32,60) இவ்வுண்மையையும், சுத்தமாயாவடிவமாகிய ஓ வடிவம் சூக்குமம் என்பதனையும், அதுவே அருள்வடிவான சத்தியாக மாறுதலடையும் என்பதனையும் அறியாதார் அவ் ஓ வடிவத்தையும் பிரிந்து உயிர் சிவத்தை அடையும் என்பர். இது தூலம் பிணமாக விழச் செத்த பின்பு முத்தியுளதாம் என்னும் சந்தானகுரவச் சைவக் கொள்கைபோன்றதோர் போலிக்கொள்கையே யன்றி உண்மைச் சைவ முத்தி நிலையாகாது என அறிக. சுத்தாகிய மெய்யும் சித்தாகிய உயிரும் வேறு வேறு எனத் துவிதபாவனை பண்ணுவதே அசுத்தமாயையாகும். தேக சீவசொரூபம் ஒன்றே என உணராதவரை பகிர்முகம் அறாது. அதாவது முன்னிலைக் சுட்டுணர்வு ஒழியாது என்பது. தேகசீவ சொரூபமே இருவினைசொரூபம். "வினைப் போகமே ஒரு தேகங்கண்டாய்" என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு. தேகசீவ சொரூபம் ஒன்றே எனச்சீவர்கள் உணர்ந்து உய்தியடைவது மிக அரிதினும் அரிதாம் என்பர் பெரியார். இதனை உணராதவர்க்கு மாயை காலறாது. இவைதாம் கிரந்தி எனவும் பந்தம் எனவும் அத்தியாரோபம் எனவும் கூறப்படும். இவ்வரிய பெரிய உண்மையையே, "ஊசலாட்டும் இவ்வுடல் உயிர் ஆயின இருவினை அறுத்து.... ....உணர்வு தந்து ஒளியாக்கி" என நமது மாணிக்கவாசகசிவம் மாணிக்கத்திருவாயால் அகில சீவர்களும் உய்யும் பொருட்டு மாணிக்க மணிகளாக உமிழ்ந்து வானிற் கலந்தது. [நமப்பார்வதீ பதயே! ஹர ஹரமகாதேவ!!]

ஐந்துபூதமும்சுத்தமாகவும்அசுத்தமாகவும் அதாவதுசூக்குமமாகவும்தூலமாகவும் விளங்குகின்றன. தூலத்தை அமலமாக விளைப்பதால்எழுவது அரூபசொரூபம்.அதாவதுஅருவுருவம். இதுவே பிரணவ மந்திர வடிவமாகிய சதாசிவ வடிவம் என்பது. இத்தகைய அரிய பெரிய சீவன் முத்தி நிலை கைவரப்பெற்று உலக குருவாகி விளங்கிய எம் அண்ணலாகிய திருமூலர் "நந்தி யருளாற் சதா சிவ ஞயினேன், நந்தி யருளாலே நானிருந்தேனே" என அருளியதும் அறிக. இவ் வடிவ முடைய சீவன் முத்தர் அவித்தை என்னும் மாயையை அடிமை கொண்டவராதலால் நித்தியானந்தராய் வதிவர் உலககுரவராக வெளிப்பட்டு பக்குவான்மாக்களுக்கு உபதேசஞ் செய்யும் உரிமையுடையார் இவரேயாவர். அசுத்த நிறை ஒழியப் பெருமையாற் பிணமாக வீழ்ந்து பிறவிவலைப் படுதற் குரிய மருளுடம்பினராகிய சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளரும் வித்துவான்களும், வேடதாரிகளாகிய போலிச் சாமிமாரும் உலககுரவராதற்கு உரியராகார். சீவன்முத்தர் இயல்பைச் சுத்தசாதகத்துக் கண்டு தெளிக (செ 64–81. 90–92) அசுத்த நிறையமைந்த தூலத்தை அமலமாக விளைத்து நித்தியத்துவம் அடையவேண்டும் என்றஉண்மையையே திருவாசக முதலிய தெய்வத்தமிழ் மறைகள் முறையிடுவனவாகும். திருவாசகத்துள்ள சிவபுராணமும், அகவல்களும், திருக்கழுக்குன்றப் பதிகமும், திருப்படையாட்சி என்னும் திருப் பதிகமும் மெய்யுணர்ச்சி கைவருதற்கு மிகமுக்கியமானவையாகும். மணிவாசகர் தம்முள்ளே ஆசான் தரிசனம் பெற்றபோது திருக்கழுக்குன்றப் பதிகத்தை அருளிச்செய்தனர். அவ் ஆசான் தானேயானபோது அஃதாவது ஈனமில் காயமாகிய ஓ வடிவம் பெற்றுச் சீவன் முத்தரான அவசரத்தில் அச்சோப்பதிகத்தை அருளிச்செய்தனர். (நமப்பார்வதீபதயே! ஹரஹரமகாதேவ!!)

மணிவாசகப் பெருமான் தாம் அருளிய திருவாசகப் பொருளை அறியமுடியாது, அதனைத்தம்மிடத்து வினவிய தில்லைவாழந்தணமூர்த்திகளுக்கு அதனைக்கூறுவல் எனக் கனகசபையிற்

புகுந்து நடராசப்பெருமான் சந்நிதியிற் பலரோருங்கண்டு போற்றும்படி மறைந்தருளிய அரும்பெருஞ் செயலாலும் அவ்வாறு தூலத்தோடு மறைந்து சிதாகாசவடிவினனாகிய அப்பெருமானை அடைந்து சிவாங்கமாதலாகிய உண்மைச்சைவமுத்தியே அத்திருமறை நுதலிய பொருளாம் என வெள்ளிடைமலைபோல விளக்கமுறக்காட்டியமையாலும் அத்திருவாசக உண்மை தெள்ளிதின் அறியப்படும். எம்பெருமானே திருவாசகத்தின் அருமை பெருமையை உணர்ந்து அகில சீவரும்உய்யும் பொருட்டுத் தனது அருமைத் திருக்கரத்தால் அதனை எழுதி வைத்தனன் என்றால், மணிவாசகர் காலத்திருந்த வேதாகம பண்டிதர்களாகிய தில்லைவாழந்தணர்களே அதன் பொருளை அறிய முடியாது மயங்கினார்கள் என்றால், அம்மணிவாசகப்பெருமான் திருவடிகளைப் பூசித்தற்கும் அருகனாகாத ஒன்றுக்கும் பற்றாத சிறியேனாகிய தமியேன் அதன் அருமை பெருமையையும், பரிபாஷைகளால் உணர்த்தப்பட்ட அநுபவ நெறிகளின் உண்மைப்பொருளையும் மேலும் விரித்துரைக்கத் தகுமோ!

இதுகாறும் கூறியவைகளால் சற்குரு நாதனாகிய எம்பெருமான் அருளால் அடையப்படும் அரிய பெரிய சகச நிட்டையால் தூலம் அள்ளுருக்கையாய்ச் சூக்குமமாக அதனோடு உலகுகண்டு போற்ற மறைந்து சிவாங்கமாதலாகிய உண்மைச்சைவ முத்தியே எம்பெருமான் தனது அருமைத் திருக்கரத்தால் எழுதி உதவியருளிய திருவாசக உண்மையாம் என்பதும், அம்முத்தி நிலையின் அருமைபெருமையும், அதனை அடைதற்குரிய சகசநிட்டையின் அருமை பெருமையும் பிறவும் ஒருவாறு உணரப்படும்.

திருவாசகத்தையும் அதனை அருளிய குருநாதனையும் பூசித்து உலகம் பயனடையுமாறு எம் பெருமான் திருவருள் புரிக.

"மதுரவாசகம் ஓதின் முத்தி உறுபயன்"

திருவாசக உண்மை முற்றிற்று.